பரமக்குடி நகராட்சி அலுவலகம்
நாள் 21.10.2023

**அன்புடையீர்**,

பரமக்குடி நகர்மன்றத்தின் சாதாரணக்கூட்டம் நிகழும் சுபகிருது வருடம் ஐப்பசி 9ம் நாள் அக்டோபர் மாதம் வியாழக்கிழமை ( 26.10.2023) முற்பகல் 11.00 மணிக்கு கீழ்க்காணும் பொருள் குறித்த சாதாரணக் கூட்டம் நகர்மன்ற கூட்ட அரங்கில் நடைபெற உள்ளது. நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தலைவர்
பரமக்குடி நகர்மன்றம்

| | |
|---|---|
| பொருள்.1 | பரமக்குடி நகராட்சி நகரமைப்பு அலுவலர் அவர்களின் செப்டம்பர் 2023 மற்றும் அக்டோபர் 2023ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br>**<u>அலுவலக குறிப்பு</u>** –<br>மன்றம் பதிவு செய்யலாம்.<br>**தீர்மானம் எண்.688, பதிவு செய்யப்பட்டது.** |
| பொருள்.2 | பரமக்குடி நகராட்சி சுகாதார அலுவலர் அவர்களின் செப்டம்பர் 2023 மற்றும் அக்டோபர் 2023ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br>**<u>அலுவலக குறிப்பு</u>** –<br>மன்றம் பதிவு செய்யலாம்.<br>**தீர்மானம் எண்.689, பதிவு செய்யப்பட்டது** |
| பொருள்.3 | **இந்நகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களின் சேமநலநிதி சந்தா தொகைக்கான வட்டி முன்மொழிவு 2022-2023ம் ஆண்டிற்கு தயார் செய்யப்பட்டுள்ளதற்கு Shri Prasath Associates என்ற முகவரிக்கு ரூ.25400/-யை (V.Sathesh kumar solutions)தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.**<br>**அலுவலகக்குறிப்பு**<br>**மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**தீர்மானம் எண்.690, அனுமதிக்கப்பட்டது** |
| பொருள்.4 | **இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.32 ல் தியாகி இமானுவேல் சேகரனார் நினைவிடம் அமைந்துள்ளது. ஆண்டுதோறும் செப்டம்பர் மாதம் 11 ம் தேதி நினைவு தினம் அனுசரிக்கப்படுகிறது. அன்றைய தினம் அரசியல் தலைவர்கள், முக்கிய பிரமுகர்கள் மற்றும் பொதுமக்கள் அதிக அளவில் நினைவிடத்திற்கு வருகைபுரிவார்கள். பொதுமக்கள் மற்றும் அரசியல் தலைவர்கள் நலன்கருதி நினைவிடத்தை சுற்றியுள்ள பகுதிகளான அழகப்பா பல்கலைகழகம் சந்தைப்பேட்டை பொன்னையாபுரம் இரயில்வே சுரங்கப்பாதை சர்வீஸ் ரோடு மற்றும் ஐந்துமுனை சந்திப்பு ஆகிய பகுதிகளில் மின்விளக்குகள் வசதி செய்தல் ஆங்காங்கே தண்ணீர் வசதி செய்தல் ஓட்டப்பாலம் முதல் முத்தையா கோவில் வரை தேசிய நெடுஞ்சாலையில் இருபுறங்கள் மற்றும் நினைவிடத்தை சுற்றியுள்ள பகுதிகளில் மரத்தால் ஆன தடுப்பு வேலிகள் அமைத்தல், முக்கிய சாலைகளில் உள்ள மேடுபள்ளங்களை கிராவல் கானகிரீட் மூலம் சரிசெய்தல், தற்காலிக கழிப்பறை அமைத்தல் மற்றும் சாமியான பந்தல்** |

| | |
|---|---|
| | அமைத்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் இராமநாதபுரம் அவர்களின் ஆய்வுக்கூட்டத்தில் அறிவுறுதிதியதன் பேரில் மேற்கண்ட அனைத்துப் பணிகளையும் மேற்கொள்ள ஏற்படும் உத்தேச செலவினத் தொகை ரூ.5,30,000/-க்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி பெறலாம். மேற்படி நினைவு தினத்திற்கு குறுகிய நாட்களே உள்ள காரணத்தால் பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்கள் முன்அனுமதி பெற்று குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி பெற்று மேற்கண்ட பணியை செய்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்கள் முன்அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடந்த்தையும்மன்றம் அங்கீகரிக்கலாம். மேற்கண்ட பணிக்கு ஆகும் செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்,<br>**தீர்மானம் எண்.691, அனுமதிக்கப்பட்டது** |
| பொருள்.5 | பரமக்குடி நகராட்சி ஆணையாளரை பிரதிவாதியாக கொண்டு திரு.இராமையா என்பவர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் பரமக்குடி வழக்கு எண். OS எண்.99/2023 யின்படி வழக்கு தொடர்ந்துள்ளார். இந்நகராட்சி வார்டு–எப், பிளாக்–6, பழைய சர்வே எண்.80/2, புதிய சர்வே எண்.194 என்ற இடத்திற்கு நகராட்சியின் எல்.ஆர்.புத்தகத்தில் மனுதாரரின் பெயர் இடம் பெறவில்லை என தொடரப்பட்ட வழக்கில் நகராட்சி சார்பாக வழக்கறிஞர் திரு.என் இளங்கோவன்அவர்கள் ஆஜராகி வழக்கை நடத்திடவும், மேற்படி வழக்கிற்கான செலவு தொகையினை அனுமதிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>**தீர்மானம் எண்.692, அனுமதிக்கப்பட்டது** |
| பொருள்.6 | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் காலை உணவு திட்டம் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை அரசுப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும் திட்டம் CMBFS அரசு ஆணை எண்.43/27.07.2022ன்படி திட்ட செயலாக்கம் வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் ஆய்வுப்படிவங்கள் செயலியில் பதிவேற்றம் செய்யப்படுவதுடன், தாமதத்தை தவிர்க்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, நகராட்சி தொடக்கப்பள்ளிகளில் பயிலும் 1 முதல் 5ம் வகுப்பு வரை பயிலும் மொத்த மாணவ/மாணவியர்களின் எண்ணிக்கை 993+441+37 ஆக மொத்தம் 11 பள்ளிகளில் 1471 மாணவ/மாணவியர்களுக்கு காலை உணவு பரிமாறும் பணி மற்றும் இல்லம் தேடிக்கல்வி, தன்னார்வாளர்பணியாளர்களுக்கு மாதம் ரூ.30000/– அதன் செலவினத்தை கல்வி நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றத்தின் முன் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>**தீர்மானம் எண்.693, அனுமதிக்கப்பட்டது** |
| பொருள்.7 | நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்: 2587/2023/EA-2 நாள்: 16.08.2023 ம் தேதிய கடிதத்தில் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 9 |

| | |
|---|---|
| | எமனேஸ்வரம் – ஜீவாநகர் பகுதியில் தேசிய சுகாதார இயக்கம் 2023-24 திட்டத்தின் கீழ் புதிதாக நகர்ப்புற சுகாதார துணை நிலையம் கட்ட அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி எமனேஸ்வரம் - ஜீவாநகர் பகுதியில் நகர்ப்புற சுகாதார துணை நிலையம் கட்டும் பணிக்கு ரூ.30.00 இலட்சத்திற்கு திட்டப்பிரேரணை தயார் செய்யப்பட்டுள்ளது. மன்றத்தின் அனுமதிக்கு மேலும் மேற்படி பணிக்கு உரிய நிர்வாக அனுமதி வேண்டி திட்ட அறிக்கையை சமர்ப்பிக்கவேண்டியுள்ளதாலும் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர்ந்ததை மன்றம் ஏற்கலாம்.<br>**அலுவலகக் குறிப்பு**<br>மன்றம் அனுமதிக்கலாம். நிர்வாக அனுமதி கோரி திட்டப்பிரேரணை சமர்ப்பிக்க வேண்டியுள்ளதால் மேற்படி பணிக்கு பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர்ந்ததை மன்றம் அங்கீகரிக்கலாம்<br>**தீர்மானம் எண்.694, அங்கீகரிக்கப்பட்டது** |
| பொருள்.8 | பரமக்குடி நகராட்சி எமனேஸ்வரம் பகுதியில் புதிதாக துணை சுகாதார நிலையம் அமைக்க ஜீவாநகர் பகுதியை தேர்வு செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்கள் கடிதம் ந.க.எண். 2587/2023/EA-2 நாள்: 16.08.2023 ம் தேதிய கடிதத்தில் இடம் தேர்வு செய்து பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சி ஜீவாநகர் வார்டு எண்9-ல் புதிதாக துணை சுகாதார நிலையம் அமைக்க நகர்சார் ஆய்வாளர் இடம் தேர்வு செய்து 12.09.2023 ல் அறிக்கை செய்துள்ளார். மேற்படி இடம் நகரளவை கணக்குகளில் வார்டு இ, பிளாக் -5, நகரளவு எண் -11 சர்க்கார் புறம்போக்கு வண்டிபாதை என பதிவுகள் உள்ளது. மேற்படி பாதை நயினார்கோவில் சாலை துவங்கும் இடத்தில் 25.0மீ அகலம் தொடங்கி கடைசியில் 7.0மீ என உள்ளது. மேலும் பொது புழக்க தார்ச்சாலை 5.0மீ மட்டுமே உள்ளதால் அகலமான பகுதி ஆக்கிரமிப்பு செய்யாமல் இருக்க பொதுமக்கள் பயன்பாட்டிற்கு அரசின் சிறப்பு திட்டமாக உள்ளதால் புதிதாக துணை சுகாதார நிலையம் அமைக்க 8.0மீ X 25.0மீ இடத்தை தேர்வு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு.695</u>**<br>மேற்படி சாலையினை அகலப்படுத்தும் திட்ட உத்தேசம் ஏதும் இல்லை என்பதனால் , மேற்படி இடத்தில் பணிகள் செய்திட அரசின் திட்டத்தை செயல்படுத்தும் பொருட்டு மன்றம் அனுமதிக்கலாம்.<br>**தீர்மானம் எண்.695, அனுமதிக்கப்பட்டது** |
| பொருள்.9 | பரமக்குடி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் போக்குவரத்துக்கு இடையூராக சாலை மற்றும் தெருக்களில் சுற்றித்திரியும் மாடுகளை (கால்நடைகள்) பிடித்து ஏலம் விடுவது மற்றும் பொதுசுகாதார சட்டத்தின்படி நடவடிக்கை மேற்கொள்வதற்கு முன் பொது மக்களுக்கு விழிப்புணர்வு படுத்துவதற்காக தினமலர் நாளிதழலில் விளம்பரம் |

| | |
|---|---|
| | செய்தமைக்கு உண்டாகும் செலவின தொகை ரூ.10206/-க்கு மட்டும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>மேற்கண்ட விளம்பரம் செய்தமைக்கு ஆன தொகையினை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.<br>**தீர்மானம் எண்.696, அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்.10 | நகராட்சி நிர்வாக இயக்குநர், மதுரை அவர்களது கடித ந.க.எண்.1572/2023/பி2 நாள் : 08.09.2023 ன்படி பரமக்குடி நகராட்சியில் நூலகம் மற்றும் அறிவுசார் மையங்களுக்கு கொள்முதல் செய்யப்படும் நூல்களுக்கான செலவினத்தொகை ரூ.10.00 இலட்சத்தினை இந்நகராட்சி கல்வி நிதியின் கீழ் செலவினம் மேற்கொள்ளவும் மேலும் இத்தொகையை நகராட்சி நிர்வாக இயக்குநரகத்திற்கு உரிய கணக்கில் உடனடியாக செலுத்தவும் அறிவுறுத்தப்பட்டுள்ளதால் நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொகை செலுத்தவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு.</u>**<br>1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.மேற்படி தொகையினை நகராட்சி நிர்வாக இயக்குநரகத்திற்கு உரிய கணக்கில் உடனடியாக செலுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளதால் நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொகை செலுத்தியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**தீர்மானம் எண்.697, அனுமதிக்கப்பட்டது** |
| பொருள்.11 | நகராட்சி நிர்வாகம் குடிநீர் வழங்கல் துறையின் அரசாணை எண்.145 நாள் : 14.10.2022 ல் உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள தெருவிளக்குகளை ஆற்றல்மிகு (LED) தெருவிளக்குகளாக மாற்றுவதற்கு உரிய அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அதன் பொருட்டு பரமக்குடி நகராட்சி பகுதியில் உள்ள 2770 தெருவிளக்குகளை LED விளக்குகளாக மாற்றம் செய்வதற்கு ரூ.301.20 இலட்சம் மதிப்பீட்டில் உரிய திட்ட கருத்துருவினை சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கு அதற்கான நிதி ஆதாரத்தினை TUFIDCO நிறுவனத்தின் மூலம் கடனாக பெற்றுக்கொள்ளவும் அக்கடன் தொகையினை 6 ஆண்டுகளில் 5% வட்டி தொகையுடன் திரும்ப செலுத்திடவும் அரசாணையில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.<br>அதன்படி பரமக்குடி நகராட்சி பகுதியில் உள்ள 2770 தெருவிளக்குகளை ஆற்றல்மிகு (LED) விளக்குகளாக மாற்றம் செய்வதற்கு ரூ.301.20 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்துவதற்கு TUFIDCO நிறுவனத்திலிருந்து கடன் பெற மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு** |

| | |
|---|---|
| | 1. மேற்கண்ட திட்டத்தினை செயல்படுத்த TUFIDCO நிறுவனத்தின் மூலம் கடனாக பெற்றுக்கொள்ளவும் அக்கடன் தொகையினை 6 ஆண்டுகளில் 5% வட்டி தொகையுடன் திரும்ப செலுத்திடவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று உரிய கருத்துருவினை நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு சமர்ப்பித்ததை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>**தீர்மானம் எண்.698, அங்கீகரிக்கப்பட்டது** |
| பொருள்.12 | இராமநாதபுரம் மாவட்டத்தில் மாண்புமிகு,தமிழக முதல்வர் அவர்கள் வருகையை முன்னிட்டு தமிழக அரசின் சாதனைகளை விளக்கி வெளியிடப்பட்டுள்ள சிறப்பு மலரில் பரமக்குடி நகராட்சி பகுதிகளில் தமிழக அரசின் சாதனைகள் மற்றும் திட்டங்கள் வளர்ச்சிப்பணிகள் குறித்து தினசரி நாளிதழில் விளம்பரங்கள் வெளியிட்ட வகையில் கீழ்க்காணும் விபரப்படியான பட்டியல்கள் நாளிதழ்களிடமிருந்து வரப்பெற்றுள்ளது. பட்டியல் விபரம் கீழ்க்கண்டுள்ளவாறு. |

| வ,எண் | நிறுவனம் | விபரம் | பட்டியல் தொகை (ரூ) |
|---|---|---|---|
| 1. | மாலைமுரசு | சிறப்பு மலர் | 16000 |
| 2. | தினமலர் | சிறப்பு மலர் | 39761 |
| 3. | இந்து தமிழ் | சிறப்பு மலர் | 34650 |
| 4. | தினத்தந்தி | சிறப்பு மலர் | 76230 |
| 5. | தமிழ்முரசு | சிறப்பு மலர் | 34833 |
| 6. | தினகரன் | சிறப்பு மலர் | 74221 |
| 7. | தினமணி | சிறப்பு மலர் | 34650 |
| 8. | மாலைமலர் | சிறப்பு மலர் | 33783 |
| | **மொத்தம்** | | **3,44,128** |

மேற்காணும் விபரப்படி பட்டியல் தொகை ரூ.3,44,128/-ற்கு செலவு மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் மேற்கண்ட நிறுவனங்களுக்கு தொகை வழங்க வேண்டியுள்ளதால் நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>அலுவலககுறிப்பு</u>**

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியின் கீழ் செலவு மேற்கொள்ளவும், மேற்கண்ட நிறுவனங்களுக்கு தொகை வழங்க வேண்டியுள்ளதால் நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனமதி பெற்று தொகை வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| | **தீர்மானம் எண்.699, அனுமதிக்ககப்பட்டது** |
| பொருள்.13 | **பரமக்குடி நகராட்சி பொதுப்பிரிவு பணியாளர்கள் துப்புரவுபணியாளர்கள் பொறியியல் பிரிவு பணியாளர்கள் நகர்நல செவிலியர் மற்றும் ஆயா அலுவலக உதவியாளர்கள் அனைத்து பணியாளர்கள் 2023-24ல் எதிர்வரும் தீபாவளி பண்டிகைக்கு சீருடைகள், காலணிகள், தலைபாகை வாங்கி வழங்குவதற்கும் சீருடைகள் தைக்கும் தையல்கூலி ஆகியவற்றிற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.350000/- பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.**<br><br>**<u>அலுவலகக்குறிப்பு</u>**<br><br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>**தீர்மானம் எண்.700, அனுமதிக்ககப்பட்டது** |
| பொருள்.14 | **இந்நகராட்சிக்கு சொந்தமான அசையா சொத்துக்களான கடைகளை குத்தகைக்குவிடப்பட்டு 9 ஆண்டுகள் முடிவடைந்த இனங்களுக்கு தற்போதைய பொதுப்பணித்துறை விலை விகிதம் மற்றும் உள்ளூர் அங்காடி மதிப்பீட்டின் அடிப்படையில் வாடகை மறுசீராய்வு செய்வது சம்மந்தமான அரசாணை (நிலை) எண்.92 நாள் 03.07.2007ன்படியும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் வழிகாட்டுதலின்படி மறுசீராய்வு செய்யப்பட்ட மாத வாடகைத் தொகை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.** |

| வ.எண் | வரிவிதிப்பு எண் | கடையின் விபரம் | ஏலதாரர் பெயர் | ஒருமாத வாடகை | ஓராண்டு வாடகை |
|---|---|---|---|---|---|
| **1** | 40001 | பேருந்து நிலையம் புதிய கடை எண் 1 | ஜெயராமன் | **4300** | 51600 |
| **2** | 40002 | பேருந்து நிலையம் புதிய கடை எண் 2 | பி.ஜெகதீஸ்வரன் | **4300** | 51600 |
| **3** | 40037 | பேருந்து நிலையம் புதிய கடை எண் 3 | டி.சித்ரா | **4300** | 51600 |
| **4** | 40003 | பேருந்து நிலையம் புதிய கடை எண் 4 | J.பஞ்சவர்ணம் | **4300** | 51600 |
| **5** | 40004 | பேருந்து நிலையம் புதிய கடை எண் 5 | எஸ்.ராஜலெட்சுமி | **4300** | 51600 |
| **6** | 40005 | பேருந்து நிலையம் புதிய கடை எண் 6 | ஜி.கார்த்திகை ராஜ் | **4300** | 51600 |
| **7** | 40006 | பேருந்து நிலையம் புதிய கடை எண் 7 | ஆர்.அரசம்மாள் | **4300** | 51600 |
| **8** | 40007 | பேருந்து நிலையம் புதிய கடை எண் 8 | எம்.செய்யது முகமது | **4300** | 51600 |
| **9** | 40008 | பேருந்து நிலையம் புதிய கடை எண் 9 | எம்.சுப்பிரமணியன் | **4300** | 51600 |
| **10** | 40009 | பேருந்து நிலையம் புதிய கடை எண் 10 | எஸ்.முருகன் | **4300** | 51600 |
| **11** | 40010 | பேருந்து நிலையம் புதிய கடை எண் 11 | கே.சேகர்செல்வி | **4300** | 51600 |
| **12** | 40011 | பேருந்து நிலையம் புதிய கடை எண் 12 | விஜயகுமார் | **4300** | 51600 |
| **13** | 40012 | பேருந்து நிலையம் புதிய கடை எண் 13 | சி.பாலு | **4300** | 51600 |
| **14** | 40013 | பேருந்து நிலையம் புதிய கடை எண் 14 | பி.செந்தில்குமார் | **4300** | 51600 |
| **15** | 40014 | பேருந்து நிலையம் புதிய கடை எண் 15 | எம்.அமுதா | **4300** | 51600 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 16 | 40015 | பேருந்து நிலையம் புதிய கடை எண் 16 | பத்மாவதி | **4300** | 51600 |
| 17 | 40016 | பேருந்து நிலையம் புதிய கடை எண் 17 | பி.நாகலிங்கம் | **4300** | 51600 |
| 18 | 40017 | பேருந்து நிலையம் புதிய கடை எண் 18 | கே.ராஜேந்திரன் | **4300** | 51600 |
| 19 | 40018 | பேருந்து நிலையம் புதிய கடை எண் 19 | எ.திருக்கம்மாள் | **4300** | 51600 |
| 20 | 40019 | பேருந்து நிலையம் புதிய கடை எண் 20 | தேவதாஸ் | **9000** | 108000 |
| 21 | 40020 | பேருந்து நிலையம் புதிய கடை எண் 21 | தமிழ்செல்வி | **8850** | 106200 |
| 22 | 40021 | பேருந்து நிலையம் புதிய கடை எண் 22 | எம்.சோலை | **8800** | 105600 |
| 23 | 40022 | பேருந்து நிலையம் புதிய கடை எண் 23 | கே.திருமுருகன் | **8250** | 99000 |
| 24 | 40023 | பேருந்து நிலையம் புதிய கடை எண் 24 | கவிதா | **9250** | 111000 |
| 25 | 40024 | பேருந்து நிலையம் புதிய கடை எண் 25 | கே.முனியசாமி | **8450** | 101400 |
| 26 | 40025 | பேருந்து நிலையம் புதிய கடை எண் 26 | வி.ராஜா | **7700** | 92400 |
| 27 | 40026 | பேருந்து நிலையம் புதிய கடை எண் 27 | எஸ்.முகமதுபுஹாரி | **8000** | 96000 |
| 28 | 40027 | பேருந்து நிலையம் புதிய கடை எண் 28 | கே.பாலமுருகன் | **8000** | 96000 |
| 29 | 40028 | பேருந்து நிலையம் புதிய கடை எண் 29 | ஆர்.அமுதா | **8000** | 96000 |
| 30 | 40029 | பேருந்து நிலையம் புதிய கடை எண் 30 | வி.ராஜேந்திரன் | **8000** | 96000 |
| 31 | 40030 | பேருந்து நிலையம் புதிய கடை எண் 31 | ஆர்.அமுதா | **8000** | 96000 |
| 32 | 40031 | பேருந்து நிலையம் புதிய கடை எண் 32 | மோகன்ராஜ் | **8000** | 96000 |
| 33 | 40032 | பேருந்து நிலையம் புதிய கடை எண் 33 | ஆர்.தியாகராஜன் | **8000** | 96000 |
| 34 | 40033 | பேருந்து நிலையம் புதிய கடை எண் 34 | திருமுருகன் | **8000** | 96000 |
| 35 | 40034 | பேருந்து நிலையம் புதிய கடை எண் 35 | பி.சசிவர்ணம் | **8000** | 96000 |
| 36 | 40035 | பேருந்து நிலையம் புதிய கடை எண் 36 | கே.கௌரி | **8000** | 96000 |
| 37 | 40036 | பேருந்து நிலையம் புதிய கடை எண் 37 | ஜெயராமன் | **8000** | 96000 |
| 38 | 13029 | சூப்பர் மார்க்கெட் முன்புறம் உள்ள கடை எண்.1 | எஸ்.ஏ.பெரியசாமி | **4000** | 48000 |
| 39 | 13030 | சூப்பர் மார்க்கெட் முன்புறம் உள்ள கடை எண்.2 | வீ.சரவணன் | **4000** | 48000 |
| 40 | 13031 | சூப்பர் மார்க்கெட் முன்புறம் உள்ள கடை எண்.3 | செ.சுப்பிரமணியன் | **4000** | 48000 |
| 41 | 13032 | சூப்பர் மார்க்கெட் முன்புறம் உள்ள கடை எண்.4 | ரெ.ஞானசேகரன் | **4000** | 48000 |
| 42 | 13033 | சூப்பர் மார்க்கெட் முன்புறம் உள்ள கடை எண்.5 | ரெ.பூமயில் | **4000** | 48000 |
| 43 | 13034 | சூப்பர் மார்க்கெட் முன்புறம் உள்ள கடை எண்.6 | பி.சேகர் | **4000** | 48000 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 44 | 13035 | சூப்பர் மார்க்கெட் முன்புறம் உள்ள கடை எண்.7 | ஏ.முஹமதுஅயூப் ம/பெ.மைமூன்பேகம் | **4000** | 48000 |
| 45 | 13036 | சூப்பர் மார்க்கெட் முன்புறம் உள்ள கடை எண்.8 | ந.காந்தி த/பெ.நல்லகருப்பன் | **4000** | 48000 |
| 46 | 13037 | சூப்பர் மார்க்கெட் முன்புறம் உள்ள கடை எண்.9 | எஸ்.மும்தாஜ்பேகம் | **4000** | 48000 |
| 47 | 13038 | சூப்பர் மார்க்கெட் முன்புறம் உள்ள கடை எண்.10 | மா.முனியாண்டி | **4000** | 48000 |
| 48 | 13039 | சூப்பர் மார்க்கெட் முன்புறம் உள்ள கடை எண்.11 | செ.முருகன் | **4000** | 48000 |
| 49 | 13040 | சூப்பர் மார்க்கெட் முன்புறம் உள்ள கடை எண்.12 | ரெ.பிரபு | **4000** | 48000 |
| 50 | 13041 | சூப்பர் மார்க்கெட் முன்புறம் உள்ள கடை எண்.13 | ஏ.மெகர்பானு | **4000** | 48000 |
| 51 | 13042 | சூப்பர் மார்க்கெட் முன்புறம் உள்ள கடை எண்.14 | மா.கேசவன் | **4000** | 48000 |
| 52 | 13043 | சூப்பர் மார்க்கெட் முன்புறம் உள்ள கடை எண்.15 | க.நம்பு | **4000** | 48000 |
| 53 | 13044 | சூப்பர் மார்க்கெட் முன்புறம் உள்ள கடை எண்.16 | சு.சங்கர் | **4000** | 48000 |
| 54 | 13045 | சூப்பர் மார்க்கெட் முன்புறம் உள்ள கடை எண்.17 | எஸ்.ராஜா | **4000** | 48000 |
| 55 | 13046 | சூப்பர் மார்க்கெட் முன்புறம் உள்ள கடை எண்.18 | கி.நாகராஜன் | **4000** | 48000 |
| 56 | 13047 | சூப்பர் மார்க்கெட் முன்புறம் உள்ள கடை எண்.19 | பா.முருகன் | **4000** | 48000 |
| 57 | 13048 | சூப்பர் மார்க்கெட் முன்புறம் உள்ள கடை எண்.20 | கி.பால சுப்பிரமணியன் | **4000** | 48000 |
| 58 | 13049 | சூப்பர் மார்க்கெட் முன்புறம் உள்ள கடை எண்.21 | ஏ.ஷேக்ரசூல் முகமது | **4000** | 48000 |

**அலுவலககுறிப்பு-**

**மேற்கண்ட குத்தகை இனங்கள் குத்தகைக்கு விடப்பட்டு 9 ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு அரசாணை (நிலை) எண்.92 நாள் 03.07.2007 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் வழிகாட்டுதலின்படி மறுசீராய்வு செய்யப்பட்ட மாத வாடகையினை நிர்ணயிக்கும் பொருட்டு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களுடன் ஒப்புதல் பெற பிரேரணை அனுப்பி வைக்க வேண்டியிருப்பதால் அவசரம் அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மதுரை அவர்களுக்கு பிரேரணை அனுப்பி வைக்கப்பட்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.**

**தீர்மானம் எண்.701, அனுமதிக்ககப்பட்டது**

பொருள்.15

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்,24 காட்டுப்பரமக்குடி சர்ச் பின்புறம் வடபுறம் சாலையில் திருமதி.அன்புச்செல்வி என்பவர் மாவட்ட நடுவர் நீதிமன்றத்தில் சாலை அமைத்துத் தரக்கோரி வழக்கு தொடர்ந்ததை தொடர்ந்து மாவட்ட ஆட்சியர், மற்றும் மாவட்ட நடுவர், இராமநாதபுரம் அவர்களின் கடித ந,க,எண், க.மு.எ. 2/108/2022 நாள்: 22.09.2023 ன்படி ஒரு வார காலத்திற்குள் சாலை அமைத்து உரிய நடவடிக்கை அறிக்கை சமர்ப்பிக்க கேட்டுக்கொண்டதன் பேரில் மேற்படி சாலை அமைக்க ரூ.3,30,000/-க்கு உத்தேச மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளதும் மேலும் மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று 11.10.2023 அன்று

ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| | | |
|---|---|---|
| 1. | திரு.S.சந்திரன் ஒப்பந்ததாரர்,பரமக்குடி | 0.07% மதிப்பீட்டை விட குறைவு |
| 2. | திரு.M.சங்கர் ஒப்பந்ததாரர்,பரமக்குடி | 0.48% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள திரு.S.சந்திரன் ஒப்பந்ததாரர் பரமக்குடி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கும் பொருட்டு மன்றம் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர்ந்ததை மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1.நகர்மன்றதலைவர் அவர்களின் முன்அனுமதியின் படி பணி உத்தரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்,

2. மேற்படி பணியை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்

**தீர்மானம் எண்.702 அனுமதிக்ககப்பட்டது**

பொருள்.16

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.32 வருகின்ற 11.09.2023 அன்று இமானுவேல் சேகரானாரின் நினைவு நாள் நிகழ்ச்சி நடைபெற உள்ளதால் இந்நிகழ்ச்சிக்கு அரசியல் தலைவர்கள், முக்கிய பிரமுகர்கள் மற்றும் பொதுமக்கள் அஞ்சலி செலுத்த அதிக அளவில் வருகைபுரிவதை முன்னிட்டு நினைவிடத்தை சுற்றியுள்ள அழகப்பா பல்கலைகழகம், சந்தைப்பேட்டை ஆண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகம், பொன்னையாபுரம் சுரங்கப்பாதை மற்றும் ஐந்துமுனை ரோடு சர்வீஸ் சாலை ஆகிய பகுதிகளில் கூடுதலாக பொதுமக்கள் நலன் கருதி அடிப்படை வசதிகளாக மின் விளக்கு, குடிநீர் மற்றும் கழிப்பறை வசதிகள் செய்துகொடுக்க மாவட்ட ஆட்சியர் இராமநாதபுரம் அவர்களின் ஆய்வு கூட்ட நடவடிக்கை நாள் 28.08.2023 அன்று அறிவுறுத்தியதன் பேரில் ரூ.5,30,000/-க்கு உத்தேச மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளதும் மேலும் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று 04.09.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| | | |
|---|---|---|
| 1. | திரு.V.கார்த்திகைச்சாமி ஒப்பந்ததாரர்,சத்திரக்குடி | 0.08% மதிப்பீட்டை விட குறைவு |
| 2. | திரு.S.பாலசுப்பிரமணியன் ஒப்பந்ததாரர்,பரமக்குடி | 0.29% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் (0.08% மதிப்பீட்டை விட குறைவு) குறைவான ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள

| | |
|---|---|
| | திரு.V.கார்த்திகைச்சாமி ஒப்பந்ததாரர் சத்திரக்குடி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கும் பொருட்டு மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர்ந்ததை மன்றம் அனுமதிக்கலாம்.<br>**<u>அலுவலகக் குறிப்பு</u>**<br>மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றதலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கி பணி செய்து முடித்ததை மன்றம் அனுமதிக்கலாம். மேற்படி பணியை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**தீர்மானம் எண்.703, அனுமதிக்ககப்பட்டது** |
| பொருள்.17 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட ஓட்டப்பாலம் பகுதியில் தேசிய நெடுஞ்சாலை துறையினரால் புதிதாக அமைக்கப்பட்ட 12 மீ உயரம் கொண்ட உயர்கோபுர மின்விளக்கு அமைக்கப்பட்டு மின் இணைப்பு மற்றும் பராமரிப்பிற்காக இந்நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்படி மின்விளக்கிற்கு உடனடியாக மின்இணைப்பு பெற உதவி ஆட்சியர், பரமக்குடி அவர்களின் அலுவலக ந.க.எண்.பி3/1887/2023 நாள்: 21.06.2023 கடிதத்தில் கேட்டுக்கொண்டதற்கிணங்க மேற்படி மின்விளக்கை ஒளிரச்செய்ய மின்இணைப்பு பெற பணிகள் செய்ய ரூ.73,000/-க்கு உத்தேச மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளதும் மேலும் வருகின்ற 11.09.2023 அன்று நடைபெறவுள்ள இமானுவேல் சேகரனார் நினைவு நாள் நிகழ்ச்சிக்கு முன்பாக ஒளிரச்செய்ய வேண்டியுள்ளதால் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று இப்பணியை இந்நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்த நிறுவனமான ஸ்ரீ முத்தா எலக்ட்ரிக்கல் இன்ஜினியரிங், பரமக்குடி நிறுவனத்திற்கு மதிப்பீட்டு விலை விகிதத்தில் ஒப்படைப்பு பணியாக வேலை உத்தரவு வழங்கி பணி செய்து முடிக்கப்பட்டது மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.<br>**<u>அலுவலகக் குறிப்பு</u>**<br>மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றதலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கி பணி செய்து முடித்ததை மன்றம் அனுமதிக்கலாம். மேற்படி பணியை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**தீர்மானம் எண்.704, அனுமதிக்ககப்பட்டது** |
| பொருள்.18 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 36 வார்டு பகுதிகளிலும் 06/2016, 02/2018 வரையில் பணிபார்த்து வந்த டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள் சுயஉதவிக்குழுக்கள் மூலம் செயல்பட்டு வந்த நிலையில் அன்னாரின் ஊதியத்தில் பிடித்தம் செய்ய வேண்டிய (EPF) வருவங்கால வைப்புநிதி தொகை பிடித்தம் செய்யாமல் நேரடியாக பணியாளர்கள் ஊதியத் தொகையிலிருந்து வரவு வைக்கப்பட்ட காரணத்தினால் இந்நகராட்சியின் மூலம் 06/2016 முதல் 02/2018 வரையிலான வருங்கால வைப்புநிதி தொகையாக ரூ.2311931/– |

| | |
|---|---|
| | வருங்கால வைப்புநிதி அலுவலகத்திற்கு செலுத்த வேண்டியுள்ளது என Show Cause Notice வழங்கப்பட்டதன் அடிப்படையில் நகராட்சியின் மீது வழங்கு தொடரப்பட்டுள்ளது. நகராட்சியில் அலுவலக கணக்கு முடக்கப்பட்டு இருந்த நிலையில் அதனை எதிர்த்து நீதிமன்றத்தின் மூலமாக தடை ஆணை பெறப்பட்டு வழக்கு எண். W.P(MD)19754/2016 வழக்கின் மீது எதிர்வாதுரை தாக்கல் செய்ய வேண்டியுள்ளதால் நகராட்சி தணிக்கையாளரால் (Auditor) வழக்கின் மீது எதிர்வாதுரை தாக்கல் செய்தமைக்கும் EPF) வருங்கால வைப்புநிதி அலுவலகத்திற்கு விடுபட்ட தொகையினை செலுத்துவதற்கும் உண்டாகும் உத்தேச செலவின தொகைக்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u>**<br>1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.மேற்கண்ட செலவு தொகையை பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் பணிநீட்டிப்பு உத்தரவு வழங்கியதற்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>**தீர்மானம் எண்.705, அனுமதிக்ககப்பட்டது** |
| பொருள்.19 | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தியாகி இமானுவேல் சேகரனார் அவர்களுக்கு பரமக்குடி நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் மணி மண்டபம் தமிழக அரசின் சார்பில் அமைக்கப்படும் என 11.09.2023 அன்று அரசுச்செய்தியில் வெளியிடப்பட்டதன் அடிப்படையில் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடிதம் ந.க.எண். 159/செமதொசு/2023 நாள் 26.09.2023ன்படி உரிய இடத்தை தேர்வு செய்து அறிக்கை வழங்க கோரப்பட்டுள்ளது. அதன்படி தியாகி இம்மானுவேல் சேகரனார் அவர்கள் நினைவிடம் அருகில் உள்ள பரமக்குடி நகராட்சிக்கு சொந்தமான வாரச்சந்தை திடலைத் தவிர நகராட்சிக்கு சொந்தமான இடம் வேறு எதுவுமில்லை. மேலும் நகரளவை ஆவணங்களின்படி வார்டு- எச், பிளாக்-29, நகரளவை எண்.2, விஸ்தீரணம் 9.65 ஏக்கர் நகராட்சி வாரச்சந்தை என பதிவுகள் உள்ளது. இதில் கீழ்க்கண்டவாறு நிலையில் உள்ள உபயோகம் விபரம் |

| | | |
|---|---|---|
| மொத்த விஸ்தீரணம் | : | 9.65 ஏக்கர் (39105 ச.மீ) |
| 1.இராமநாதபுரம் மாவட்ட விளையாட்டு ஆணையத்திற்கு வழங்கப்பட்ட இடம் | : | 4.00 ஏக்கர் (16200 ச.மீ) |
| 2.நகராட்சி நுண்ணுயிர் உரக்கிடங்கு | : | 0.75 ஏக்கர் (3100 ச.மீ) |
| 3.அரசு மகளிர் விடுதி | : | 0.25 ஏக்கர் (1000 ச.மீ) |
| 4.குடிநீர் மேல்நிலை தொட்டி நகர சுகாதார மையம் | : | 0.24 ஏக்கர் (950ச.மீ) |
| 5.நவீன வாரச்சந்தை அமைக்க நிதி ஒதுக்கீடு பெற்று அனுமதிக்கப்பட்ட இடம் | : | 3.01 ஏக்கர் (12200 ச.மீ) |
| 6. 9மீ சுற்றுவட்டசாலை | : | 0.90 ஏக்கர் (3650 ச.மீ) |
| 7.தியாகி இமானுவேல் சேகரன் மணிமண்டபம் அமைக்க உள்ள இடம் | : | 0.50 ஏக்கர் (2025ச.மீ) |

| | |
|---|---|
| | மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அறிவிப்பின் முக்கியத்துவம் கருதி மேற்படி இடத்தில் நிலையில் உள்ள அங்கன்வாடி மையம் எண்.4 மற்றும் 5ல்உள்ள கட்டிடம் தற்போது பழுதடைந்துள்ளதால் இடித்து அதனை சுற்றியுள்ள காலியிடத்தினைச் சேர்த்து சுமார் 50 செண்ட் நிலத்தினை தியாகி இமானுவேல் சேகரனார் மணிமண்டபம் அமைப்பதற்கு அரசின் உரிய அனுமதி பெற்று நிலம் வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u>**<br>அரசாணை எண்.35 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை நாள் 17.02.1997ன்படி உள்ளாட்சிக்கு சொந்தமான இடங்களை பிறதுறைக்கு ஒதுக்கீடு செய்ய அரசு அனுமதி தரப்பட வேண்டும். எனவே உரிய அரசின் அனுமதி பெற்றுவழங்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>**தீர்மானம் எண்.706, அனுமதிக்ககப்பட்டது** |
| பொருள்.20 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 36 வார்டு பகுதிகளிலும் கழிவுநீர் வாய்க்கால் துார்வாறுதல், கட்டிட கழிவுகள் மற்றும் திடக்கழிவுகளை அகற்றுவதற்கு ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு ஜெயின் டோசர் (Hittachi) வாகனத்தை கொண்டு மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதால் இவ்வாகனத்தினை வேறு இடத்திற்கு பணி நிமித்தமாக எடுத்துச்செல்ல வேண்டியுள்ளது. எனவே இந்நகராட்சியில் இயக்கப்படாமல் இருக்கும் காம்பாக்டர் லாரி வாகனத்தினை பழுது நீக்கி கட்டமைப்பு செய்து ஜேசிபி 81 (Hittachi) வாகனத்தை எடுத்து செல்லவும் அதற்குண்டான உத்தேச செலவு தொகை ரூ.500000/–இலட்சத்திற்கு காம்பாக்டர் லாரியினை பயன்படுத்திக்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u>**<br>1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.மேற்கண்ட செலவு தொகையை பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் பணிநீட்டிப்பு உத்தரவு வழங்கியதற்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>**தீர்மானம் எண்.707, அனுமதிக்ககப்பட்டது** |
| பொருள்.21 | பரமக்குடி நகராட்சி ஆணையாளரை பிரதிவாதியாக கொண்டு திரு.ராஜா, மேரிராணி ப்பிளவர் மில் உரிமையாளர் என்பவர் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை வழக்கு எண். W.P.(MD).No.20828/2015 ல் தொடரப்பட்ட வழக்கில் ஆணையாளர் சார்பாக வழக்கறிஞர் திரு.கண்ணன்அவர்கள் ஆஜராகி வழக்கை நடத்தி முடித்தமைக்கான வழக்கு கட்டணத் தொகை ரூ.15000/– நகராட்சி வருவாய் மூலதன நிதியிலிருந்து தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலககுறிப்பு</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>**தீர்மானம் எண்.708, அனுமதிக்ககப்பட்டது** |
| பொருள்.22 | நகர்மன்ற தீர்மான எண்.127 நாள் 25.08.2022ன்படி இந்நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டு பகுதிகளிலும் 50 DBC பணியாளர்களை கொண்டு டெங்கு தடுப்பு பணிகளை மேற்கொள்ள 01.08.2023 முதல் 31.10.2023 வரை 3 மாதகால பணி நீட்டிப்பு செய்த நிலையில் 31.10.2023 –ம் தேதியுடன் முடிவடைவதால் மேற்கண்ட பணியானது பொதுசுகாதாரப்பணி என்பதால் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு பொதுமக்களின் நலன் கருதி தொடர்ந்து டெங்கு தடுப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதால் சுகாதார ஆய்வாளர் மற்றும் சுகாதார அலுவலர் அவர்களின் |

| | |
|---|---|
| | அறிக்கையின்படி மாவட்ட ஆட்சியர் அவர்கள் அறிவித்த பழைய தினக்கூலி ஊதிய விகிதத்துடன் கூடுதலாக EPF ESI மற்றும் இதர செலவினங்களுடன் 01.11.2023 முதல் 31.01.2024 வரை மூன்று மாத காலத்திற்கு ஏற்கனவே பணிமேற்கொண்டு வந்த நிறுவனமான Exsernet Madurai என்ற நிறுவனத்தின் மூலம் அரசு வழிகாட்டுதலின்படி பணி மேற்கொள்வதற்கு பணிநீட்டிப்பு உத்தரவு வழங்கிட நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>**தீர்மானம் எண்.709 அனுமதிக்ககப்பட்டது** |

தலைவர்
பரமக்குடி நகர்மன்றம்